இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை மட்டம் - 05

EPU5550 – ஆரம்பக் கல்வியில் கல்வி உளவியல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 01.06.2025 நேரம்:மு.ப 09.30 - பி.ப 12.30

---

**பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.**

## பகுதி – I

1. "உளவியலில் இருந்து பல்வேறு துறைகள் உருவாகியுள்ளன." கல்வி உளவியல் அத்தகைய ஓர் துறையாகும். கல்வி உளவியலுடன் தொடர்புடைய உளவியலின் **ஐந்து (05)** ஏனைய துறைகளைக் குறிப்பிடுக.

2. வளர்ச்சிக்கும் விருத்திக்கும் இடையிலான வேறுபாட்டை உதாரணங்களை வழங்குவதன் மூலம் விளக்குக.

3. i. "பங்கேற்றலூடான அவதானிப்பு" (Participatory Observation) என்பதை விளக்குக.

   ii. மாணவர்களை அவதானிக்க "பங்கேற்றலூடான அவதானிப்பு" (Participatory Observation) என்பதைப் பயன்படுத்துவதில் உள்ள **இரண்டு (02)** பிரச்சினை பற்றி கலந்துரையாடுக.

4. "ஒவ்வொரு நபரும் ஒரே வயதில் ஒரே விருத்தி நிலைகளை அடைவதில்லை." உதாரணங்களை மேற்கோள் காட்டி இக்கருத்தை நியாயப்படுத்துக.

5. மாணவர்களின் கவனத்தைத் தக்க வைக்க ஆசிரியரொருவர் பயன்படுத்தக்கூடிய **ஐந்து (05)** உத்திகளை எழுதுக.

6. மனவெழுச்சி தொந்தரவுகள் (Emotional Disturbances) காரணமாக மாணவர்களிடம் காணக்கூடிய **மூன்று (03)** நடத்தைகளை விளக்குக.

7. i. "ஊக்கல்" என்பதை வரைவிலக்கணம் மூலம் விளக்குக.

   ii. ஊக்கலுக்கான **மூன்று (03)** அணுகுமுறைகளைப் பெயரிடுக.

8. "கவனத்தை புலக்காட்சி எளிதாக்குகிறது" (Perception is Facilitated by Attention) உதாரணங்களை வழங்குவதன் மூலம் இக் கருத்தை நியாயப்படுத்துக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** கல்வி உளவியலைக் கற்பதன் விளைவாக ஆசிரியராக உங்கள் நடத்தையில் ஏற்பட்ட **ஐந்து (05)** நேர்மறையான மாற்றங்களைச் சுருக்கமாக விபரிக்குக.

   (10 புள்ளிகள்)

   **ii.** பிள்ளைகளின் கற்றலை எளிதாக்க மேற்குறிப்பிட்டுள்ள நேர்மறையான மாற்றங்களை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்கள் என்பதைப் பற்றி கலந்துரையாடுக.

   (10 புள்ளிகள்)



07

10. i. "பிள்ளைகளின் விருத்தியில் பரம்பரையின் செல்வாக்கை மாற்றுவது கடினம்." இக்கருத்தை உதாரணங்களுடன் நியாயப்படுத்துக.

**(06 புள்ளிகள்)**

ii. 'குடும்பம் மற்றும் பாடசாலை' ஆகிய **இரண்டு (02)** காரணிகளின் கீழ் "சூழல் பிள்ளை விருத்தியை எவ்வாறு பாதிக்கிறது." என்பதை விளக்குக.

**(06 புள்ளிகள்)**

iii. வீட்டில் பிள்ளை விருத்திக்கு ஏற்ற சூழலை உருவாக்க பெற்றோருக்கு வழங்க வேண்டிய துண்டுப்பிரசுரத்தைத் தயாரிக்குக.

**(08 புள்ளிகள்)**

11. i. ஆரம்பக் கல்விக் கட்டங்களில் பிள்ளைகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறை தொடர்பான ஆய்வுகளில் பரிசோதனை சாரா கற்கை (Non – Experimental Study) முறைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

**(06 புள்ளிகள்)**

ii. நேர்காணல்கள் மற்றும் வினாக்கொத்துப் பற்றி ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்க.

**(06 புள்ளிகள்)**

iii. "ஆரம்பக் கல்வியில் மாணவர்களைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கு வினாக்கொத்தை விட நேர்காணல் மிகவும் பொருத்தமானவை." மேற்குறிப்பிட்ட கருத்தை விமர்சனரீதியாக விளக்குக.

**(08 புள்ளிகள்)**

12. i. "முயன்று தவறல் கற்பித்தல் முறை மாணவர்களின் விரும்பிய கற்றல் தேர்ச்சிகளை அடைவதில் மிக முக்கியமான உத்தியாகும்." இக்கூற்றை உதாரணங்கள் மூலமாக பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

ii. மாணவர்கள் கற்றல் உத்திகளில் ஆசிரியர்கள் வலுவான கல்வி மற்றும் நடைமுறை பயிற்சி பெறுவதன் முக்கியத்துவத்தை தர்க்கரீதியான வாதங்களுடன் விவாதிக்குக.

**(10 புள்ளிகள்)**

13. i. பிள்ளைகளின் முதிர்ச்சி கற்றலை எவ்வாறு பாதிக்கிறது என்பதை ஆசிரியரொருவர் அறிந்திருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி உதாரணங்கள் மூலம் கலந்துரையாடுக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளையின் முதிர்ச்சி நிலைக்கும் அவர்களுக்கு வழங்கப்பட்ட கற்றலை பணிகளுக்கும் இடையிலான ஏற்றதாழ்வுகள் அவர்களின் கல்வி செயல்திறனை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை பகுப்பாய்வு செய்க.

**(10 புள்ளிகள்)**

**- முழுப்பதிப்புரிமையுடையது -**



09